பக்கங்கள் 18+7

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு


முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 30 புதன்கிழமை 12.06.2024 அதிர்வு 317

## பாணந்துறை தொழிற்சாலையில்

# இரசாயனக் கசிவால் முப்பது பேர் பாதிப்பு

(எம்.எப்.எம். அலி)

பாணந்துறை – நல்லுருவ பகுதியிலுள்ள தொழிற்சாலையொன்றில் இரசாயனக் கசிவு ஏற்பட்டதை 04



# 13 ஐ அமுலாக்குவது தொடர்பில் வட்டமேசை மாநாட்டைக் கூட்டுக!

## முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய கோரிக்கை

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்குவது குறித்து அரசியல் தலைவர்களும், புலம்பெயர் தமிழர்களும் நேர்மறையான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ள நிலையில் தாமதமின்றி வட்டமேசை மாநாட்டைக் கூட்டி தீர்வை எட்டுமாறு சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரிய கோரிக்கை விடுத்துள்ளார். 02



# டிப்பர் வாகனத்துடன் மோதி குடும்பஸ்தர் பரிதாபச் சாவு!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நுணாவில் ஏ – 9 வீதியில் டிப்பர் வாகனத்துடன் மோதுண்டு இளம் குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து இன்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனத்துடன் வீதியில் நடந்து பயணித்த குடும்பஸ்தர் மோதுண்டு உயிரிழந்தள்ளார்.

குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் 30 பேர் ஐக்கிய மக்கள் சக்தியில் கைகோர்ப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட மொட்டுக் கட்சி உறுப்பினர்கள் சிலர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்னிலையில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அங்கத்துவத்தை ஏற்றுக்கொண்டு சுமார் 30 பேர் இணைந்துகொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில் தொகுதி இணை தொகுதி அமைப்பாளரும் கல்வி அபிவிருத்தி சங்கத்தின் இணைப்புச் செயலாளரும் ஐக்கிய இளைஞர் சக்தியின் மாவட்ட செயலாளருமான வெள்ளையன் வினோகாந்த் விடுத்த அழைப்பை ஏற்று அம்பாறை மாவட்டத்துக்குரிய மொட்டுக் கட்சியின் பிரதிநிதிகளான தமன பிரதேச சபையைச் சேர்ந்த முன்னாள் உப தவிசாளர் வெனுர பிரதீத், நாமல் ஒய பிரதேச சபையைச் சேர்ந்த உறுப்பினர் டபிள்யூ. விஜேவந்த, உகன பிரதேச சபையைச் சேர்ந்த உறுப்பினர் ரவீந்ர ருபசிங்க மற்றும் முன்னாள் அமைச்சர் விமல வீர திஸாநாயக்கவின் அமைச்சரவை ஊழியர்கள், இளைஞர் நாடாளு மன்ற உறுப்பினர் ஜானக கசும் உட்பட மொட்டுக் கட்சியினுடைய உள்ளூராட்சி சபைகளின் வேட்பாளர்கள், கிராமமட்ட தலைவர்கள் என சுமார் 30 அங்கத்தவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்னிலையில் இணைந்து கொண்டனர்.



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட இருக்கும் சஜித் பிரமதாஸவை வெற்றி பெறச் செய்யும் முயற்சியில் அர்ப்பணிப்புடன் ஈடுபடுவோம் என்று அவர்கள் உறுதியாகக் கூறியுள்ளனர்.

அது மாத்திரம் இன்றி அம்பாறை மாவட்டத்தில் ஏனைய கட்சிகளில் அங்கத்துவம் வகிப்பவர்களையும் சஜித் பிரேமதாஸவுடைய வெற்றிக்காகக் களப்பணியில் ஈடுபட முயற்சிப்பதாகவும் அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

உண்மையில் இந்தச் செயற்பாடுகளால் எதிர்கால ஜனாதிபதியாக சஜித் பிரேமதாஸ வருவது மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று அமைப்பாளர் வினோகாந்த் இதன்போது தெரிவித்தார்.

எனவே, ஏனையவர்களும் சஜித் பிரேமதாஸ கடந்த காலங்களில் ஜனாதிபதிப் பதவியோ, பிரதமர் பதவியையோ ஏற்றுக்கொள்ளவில்லை எனக் குறை கூறியவர்கள் அனைவருக்குமான ஒரு செய்தியாக தற்போது இடம்பெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் உங்கள் வாக்குகளைச் சஜித் பிரமதாஸவுக்கு வழங்கி அவர்களை ஜனாதிபதியாக்கும் படியாகவும், மேலும் எமது நாட்டில் காணப்படக்கூடிய அடிப்படைத் தேவைகள் பொருள் விலை உயர்வுகள் ஏழைகளின் அன்றாட வாழ்க்கைச் செலவுகள் போன்ற காரியங்களில் இருந்து நாங்கள் அடுத்த கட்ட நகர்வை நோக்கிச் செல்ல வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாக வரும் பட்சத்தில் நாட்டு மக்களுக்கான சுபீட்சமான வாழ்வு நிச்சயம் மலரும் என்பதனையும் வினோகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

# அநுரகுமார நாளை இலண்டன் பயணம்



தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நாளை (13) இலண்டனுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி இலண்டனில் நடைபெறும் கூட்டமொன்றில் உரையாற்றுவதற்காகவே அவர் அங்கு செல்கின்றார்.

புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களால் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், பிரிட்டனின் முக்கிய சில அரசியல் பிரமுகர்களையும் இந்த விஜயத்தின்போது அநுரகுமார சந்தித்துப் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# காணாமல்போன அனலைதீவு மீனவர்கள் இருவரும் தமிழகத்தில் கரை சேர்ந்தனர்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், அனலைதீவில் இருந்து மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்று காணாமல்போன இருவருவரும் இந்தியாவின் தமிழகத்தில் கரை சேர்ந்துள்ளனர்.

அனலைதீவில் இருந்து நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு நண்டு வலைக்குப் புறப்பட்ட இருவர் கரை திரும்பவில்லை என அனலைதீவு கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஜோன் பொஸ்கோவால் கடற்றொழில் திணைக்களம் மற்றும் கடற்படையினருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

35 மற்றும் 44 வயதுடைய இரண்டு மீனவர்களே இவ்வாறு காணாமல் போயிருந்த நிலையில் இன்று மாலை நாகைபட்டினத்தில் அவர்கள் கரை அடைந்துள்ளனர்.

இயந்திரக் கோளாறு காரணமாக படகு அலையில் அடித்துச் செல்லப்பட்டே இந்தியாவின் தமிழகத்தின் நாகை பட்டினம் கடற்கரையை அவர்கள் அடைந்துள்ளனர் என்று தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.




# அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள் போராட்டம்

(நானுஓயா நிருபர்)

கல்விச் சமூகத்தினர் எதிர்நோக்கும் சம்பள நெருக்கடியை அடிப்படையாகக் கொண்டு ஒன்றிணைந்த அதிபர், ஆசிரியர்கள் கூட்டமைப்பினர், பாடசாலையில் கல்வி நடவடிக்கை முடிவடைந்ததும் இன்று பிற்பகல் நுவரெலியா பிரதான தபால் நிலையத்துக்கு முன்பாகக் கவன வீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடளாவிய ரீதியில் இடம்பெறும் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் முகமாக நுவரெலியாவிலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கல்விச் சமூகத்தினர் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாகவும், சம்பள முரண்பாட்டைத் தீர்க்க வேண்டும் என வலியுறுத்தியும் அரசுக்கு எதிராக எதிர்ப்புப் பதாதைகளைக் காட்சிப்படுத்தியவாறு, கோஷங்களை எழுப்பியவாறு பிரதான நகரில் பேரணியாகச் சென்று போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்

## 41 ஆவது நாளாகவும்

# பல்கலை கல்விசாரா ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு தொடர்கின்றது!

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு இன்று 41ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றது.

15 வீத சம்பளம் குறைக்கப்பட்டமை உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குமாறு கோரி பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக நாட்டிலுள்ள 17 பல்கலைக் கழகங்களின் கல்விச் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இதேவேளை, பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர்கள் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள பணிப்பகிஷ்கரிப்பு இன்று ஆறாவது நாளாகவும் முன்னெடுக்கப்படுகின்றது.

ஊழியர்களை சேவையில் இணைத்துக்கொள்ளாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹேமச்சந்திர குணசிங்க கூறினார்.



# பஸ் நிலையத்தில் பஸ் விபத்து ஐந்து பேர் காயம்; சாரதி கைது

கொட்டாவை – மாகும்புர அதிவேக நெடுஞ்சாலை பஸ் நிலையத்தில் தனியார் பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இன்று காலை இடம்பெற்ற விபத்தில் ஐந்து பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதுக்கையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் பஸ், பஸ் நிலையத்துக்குள் நுழைய முற்பட்ட போது, பஸ்ஸின் ப்ரேக் செயலிழந்ததால், சாரதியால் பஸ்ஸைக் கட்டுப்படுத்த முடியாமல், நின்றிருந்த மற்றுமொரு பஸ்ஸில் மோதியுள்ளது.

விபத்தின்போது பஸ் நிலையம் பலத்த சேதமடைந்துள்ளது.

பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# தபால் ஊழியர்கள் தொழிற்சங்கப் போராட்டம்

தபால் ஊழியர்கள் இன்று நள்ளிரவு முதல் சுகவீன விடுமுறை தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

ஊழியர்களைச் சேவையில் இணைத்துக்கொள்ளாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த சுகவீன விடுமுறை தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஊழியர் பற்றாக்குறை காரணமாக தபால் திணைக்களத்தின் செயற்பாடுகள் முற்றாகத் தடைப்பட்டுள்ளது என்று ஒன்றிணைந்த தபால் சேவை தொழிற்சங்க ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் சிந்தக்க பண்டார தெரிவித்தார்.

### 13ஐ அமுலாக்குவது...

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

"வடக்கு மற்றும் தெற்கின் பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தவும், இனம் மற்றும் மதத்தை அடிப்படையாகக் கொண்ட மோதல்கள் மீண்டும் இடம் பெறாமல் இருப்பதற்கும், அனைத்து பிரஜைகளுக்கும் கண்ணியத்துடன் வாழக்கூடிய உரிமையை வழங்குவதும், இந்தப் பிரச்சினைகளை எதிர்கால தலைமுறைகளுக்கு விட்டு வைக்காமல் இருப்பதும் எமக்குள்ள பாரிய கடமையாகும்.

ஆகையால் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி அதற்கான தலையீடுகளை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் மேற்கொள்ள வேண்டும் என்பது எமது நம்பிக்கையாகும். மேலும் 9 ஆவது நாடாளுமன்றத்தின் கால எல்லை தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி உள்ளிட்ட ஆளும் கட்சிக்கும், ஒட்டுமொத்த எதிர்க்கட்சிக்கும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதின் முக்கியத்துவம் தொடர்பில் அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் பகிரங்கமாக கருத்து தெரிவித்துள்ளதுடன், இவ்விடயம் தொடர்பில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், மக்கள் விடுதலை முன்னணி மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தற்போது நாடாளுமன்றத்தில் சுயேட்சையாக செயற்பட்டு வரும் அதிக அளவிலான உறுப்பினர்களும் எதிர்காலத்தில் தேர்தலில் போட்டியிட எண்ணி இருக்கும் ஜனாதிபதி வேட்பாளர்களும் இந்தக் கருத்தில் உறுதியாக இருப்பது எமக்குத் தெரியும்.

இது போன்ற முற்போக்கான அபிலாஷைகளைப் பாராட்டபட வேண்டும். இந்த அனைத்து விடயங்களையும் கருத்தில் கொள்கையில் தற்போது நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து தாமதமின்றி வட்டமேசை மாநாட்டைக் கூட்டி இவ்விடயங்களை தெளிவுபடுத்திக் கொள்ளுமாறு மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகின்றோம்.

தமிழ் புலம்பெயர்ந்த தரப்பினரில் குறிப்பிடத்தக்க குழுவினர் இதற்கு ஆதரவு தெரிவித்து இருப்பதும் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். இவ்விடயத்துக்கு நாட்டின் முதன்மை தரப்புகள் ஆதரவு தெரிவித்திருப்பது பாராட்டத்தக்கது.

இந்தப் பேச்சுகளைப் புறக்கணிக்காமல் இருப்பதற்கான கடமை தமிழ் அரசியல் கட்சிகளுக்கு போன்றே அனைத்து கட்சிகளுக்கும் உள்ளது. குறுகிய அரசியல் காரணங்களுக்காக இந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விட்டால் துரோகிகள் என்று எதிர்காலச் சந்ததியினர் குற்றஞ்சாட்ட வழிவகுக்கும். ஆகையால் ஜனாதிபதி உள்ளிட நாடாளுமன்றம் உன்னத நோக்கத்துடன் தலையிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்." – என்றுள்ளது.

### இரசாயனக் கசிவால்...

அடுத்து 30 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அலகுசாதன ஒப்பனை உற்பத்திப் பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையொன்றில் பொருட்களுக்கான கலவைகளை மேற்கொள்ளும்போதே இந்த இரசாயனக் கசிவு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தை அடுத்து, தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு உடனடி சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான பொலிஸ் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




# மாணவர்களுக்கு போக்குவரத்து பாதுகாப்புக்குச் சீருடைப் பொதி

**(வி.ரி.சகாதேவராஜா)**

கிழக்கு மாகாண முதலமைச்சர் பணிமனையால் வழங்கப்பட்ட பாடசாலை மட்டத்திலான போக்குவரத்துப் பாதுகாப்புக்கான சீருடைப் பொதி கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

அந்த வகையில் திருக்கோவில் வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு சீருடைப் பொதி வழங்கும் நிகழ்வு வலயக் கல்வி பணிப்பாளர் ரி.உதயகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ. நசீர் கலந்து கொண்டார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் அபூர்வ வாய்ப்பு

தேர்தல் என்று வந்து விட்டாலே தவிர்க்க முடியாத ஒன்று - தேர்தல் கருத்துக் கணிப்பு.

தேர்தல் முடிவு எப்படி அமையும் என்ற கருத்துக் கணிப்பு அறிவிப்புகளே சில சமயங்களில் தேர்தல் முடிவுகளை தலை கீழாக மாற்றி அமைக்கும் விதத்தில் தேர்தல் அலைகளை ஏற்படுத்தி விடுவது உண்டு.

அதனால்தான் பல நாடுகளிலும் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் அதன் வாக்களிப்பு முடியும் வரை தேர்தல் கருத்துக் கணிப்புகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தியாவிலும் நாடு முழுவதிலும் வாக்களிப்பு பூர்த்தியாகும் வரை கருத்துக் கணிப்புகளுக்குத் தடை உண்டு.

நடந்து முடிந்த இந்திய பொதுத் தேர்தலிலும் வாக்களிப்பு முடிவுக்குப் பின்னர், வாக்குகள் எண்ணப்பட்டு அறிவிக்கப்படுவதற்கு இடைப்பட்ட இரண்டு, மூன்று நாள்களில் வெளியிடப்பட்ட பல கருத்துக்கணிப்புகளும் பொய்த்துப் போனமையைக் கண்டோம்.

பாரதிய ஜனதா கட்சிக்கு தனித்து அறுதிப் பெரும்பான்மை நிச்சயம், அது 350 ஆசனங்களை எட்டும் என்றெல்லாம் பல கருத்துக்கணிப்புகள் வெளியாகின. ஆனால் 240 ஆசனங்களைத்தான் அக்கட்சியினால் தனித்துப் பெற முடிந்தது. தனித்து அறுதிப் பெரும்பான்மை இல்லாமையால் அக்கட்சி கூட்டணி பங்காளிகளுடன் சேர்ந்து ஆட்சி அமைக்கும் நிலைமை.

இந்தியாவில் பாரதிய ஜனதாவுக்கு தனித்து அறுதிப் பெரும்பான்மை கிட்டாது என்ற கருத்துக்கணிப்பை வெற்றிகரமாக வெளியிட்ட நிறுவனம் ஒன்று, இலங்கை ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பூர்வாங்கக் கருத்துக்கணிப்பை மேற்கொண்டு வெளியிட்டிருப்பதாக இப்போது தகவல் வெளியாகி உள்ளது.

இந்திய அமெரிக்கர்களினால் நடத்தப்படும் இந்த நிறுவனம் இலங்கை ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நேற்றுத் தனது பிந்திய கருத்துக் கணிப்பை வெளியிட்டிருக்கின்றதாம்.

அதன்படி -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் அநுர குமார திஸநாயக்க ஆகிய பிரதான வேட்பாளர்கள் மூவருமே இன்னுமே 25 சதவீத ஆதரவைக் கூடத் திரட்டவே இல்லை.

மூவருக்கும் இடையே மிக நெருக்கமான போட்டி நிலையே உள்ளது. சராசரியாக ஒவ்வொருவரும் 21 முதல் 22 வீத வாக்குகளையே உறுதிப்படுத்தி இருக்கின்றனர்.

அதேவேளை வாக்களிக்க இருப்போரில் 35 வீதத்தினர் இன்னும் முடிவு எதனையும் - தீர்மானம் எதையும் - எடுக்காமல் இருக்கின்றார்கள்.

இந்த மிதக்கும் வாக்காளர்கள் கடைசியாக எடுக்கப் போகும் தீர்மானம்தான் பெரும்பாலும் வெற்றியாளரை முடிவு செய்யும் என்று சுட்டப்படுகின்றது.

இந்த கடும் போட்டி நிலைமை இறுதி வரை தொடருமானால், எந்த வேட்பாளரும் அளிக்கப்படும் வாக்குகளில் 50 வீதத்தை எட்டாமல் போகும் நிலைமையும் -

அதன் காரணமாக விருப்பு வாக்குகளின் அடிப்படையில் இரண்டாவது சுற்று வாக்கு எண்ணும் நிலைமையும் கூட வரலாம் என்று இப்போது ஊகம் தெரிவிக்கப்படுகின்றது.

கருத்துக் கணிப்பு முடிவுகள் பகிரங்கமாகி வருகின்றமையால் மூன்று தரப்பினரும் தங்களது ஆதரவுப் பிரச்சாரங்கள், அவற்றை ஒட்டிய நடவடிக்கைகளை அதிதீவிரப்படுத்துவார்கள் என்பதும் எதிர்பார்க்கப்படுவதே.

தென்னிலங்கையின் மூன்று பிரதான வேட்பாளர்களும் ஆளோடு ஆள் உரசி, முண்டியடிக்கும் போட்டி நிலைமை தொடருமாயின், அதில் தீர்க்கமான சக்தியாக - தீர்மானகரமான வலிமையாக - தமிழர்கள் உட்பட்ட சிறுபான்மையினர் மீண்டும் உருவெடுக்கும் அபரிதமான வாய்ப்பு நமக்குக் கிட்டும்.

அந்தச் சந்தர்ப்பத்தை புத்திசாலித்தனமாகவும், சாணக்கியமாகவும் பயன்படுத்திக் கையாளுவதன் மூலம் தமது எதிர்கால நலனை உறுதிப்படுத்திக் கொள்ள சிறுபான்மை மக்கள் எத்தனிக்க வேண்டும்.

தென்னிலங்கையின் அதிகார பீடத்தைத் தீர்மானிக்கும் வலிமை திரும்பவும் ஓர் அரிய வாய்ப்பாகக் கிட்டும் போது, புத்திசாலித்தனமற்ற பொது வேட்பாளர் எனும் வெற்றுக்கோஷத்துக்குப் பலியாகி, அந்தச்சந்தர்ப்பத்தைசிறுபான்மையினரான தமிழர்கள் கோட்டை விட்டு விடக்கூடாது.





# ஆள்கடத்தலைத் தடுப்பது தொடர்பில் பயிற்சிப் பட்டறை!

## மனித அபிவிருத்தி ஸ்தாபனம் ஏற்பாடு

ஆள்கடத்தலை எவ்வாறு தடுப்பது தொடர்பான பயிற்சி பட்டறையொன்று நேற்று (11) செவ்வாய்க்கிழமை காரை தீவில் நடைபெற்றது.

மனித அபிவிருத்தி ஸ்தாபனம் ஏற்பாடு செய்த இந்தப் பயிற்சிப் பட்டறை ஸ்தாபன இணைப்பாளர் பி.சிறிகாந்த் தலைமையில் காரைதீவு லேடிலங்கா மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனை மனித உரிமை ஆணைக் குழுவின் பிராந்திய இணைப்பாளர் ஏ.பீ.ஏ. அசிஸ் வளவாளராகக் கலந்து கொண்டார். உதவிக் கல்வி பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா தொடக்கவுரையாற்றினார்.

இதில் அரச உத்தியோகஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கையில் கொவிட் தாக்கத்தின் பின் பொருளாதார மற்றும் உணவு நெருக்கடி காரணமாக பெண்கள் அதிகமாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு புலம்பெயர்ந்த வீட்டு பணியாளர்களாக சென்றுள்ளனர்.

இதன் பின்னணியில் பாலியல் சுரண்டல், புலம்பெயர்ந்த பெண் தொழிளாளர்கள் மற்றும் சிறுமிகள் மத்தியில் கட்டாய திருமணம் என்பன தொடரும் நிலையில் ஆள்கடத்தலும் அதிகரித்துள்ளது.

அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தில் மனித அபிவிருத்தி ஸ்தாபனம் தடுத்தல், பாதுகாத்தல் மற்றும் வழக்கு பதிவிடல் உபாயங்கள் ஊடாக ஆட்கடத்தலை எதிர்த்து போராடுவதற்கு பங்களிப்பு செய்யும் நோக்கில் உலகளாவிய முன்முயற்சி (Global Initiative) என்னும் திட்ட அனுசரணையில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

ஆள்கடத்தல் செயற்பாடானது சட்டவிரோத செயற்பாடுகளில் ஒன்றாகக் காணப்படுவதால் இவற்றில் இருந்து மக்களைப் பாதுகாப்பது எல்லா துறையினரதும் கடமை என்பதுடன் தனி ஒவ்வொரு மனிதனது பொறுப்பாகும் என மனித அபிவிருத்தி தாபன திட்ட இணைப்பாளர் பி. ஸ்ரீகாந் தெரிவித்தார்.

உதவி இணைப்பாளர் எ.எம்.றியால் நிகழ்வை நெறிப்படுத்தினார்.





# ‘வீர அபிமன்யு’ நாட்டுக்கூத்து பேர்த் மாநகரில் அரங்கேற்றம்!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஈழத்தின் பாரம்பரிய கலை வடிவங்களில் ஒன்றான “வீர அபிமன்யு” என்ற நாட்டுக்கூத்து பேர்த் மாநகரில் கடந்த வார இறுதியில் அரங்கேற்றம் செய்யப்பட்டது.



தாயகத்தில் இந்த நாட்டுக்கூத்து பல்வேறு இடங்களில் நடைபெற்று வந்தாலும், புலம் பெயர் மண்ணில் மேற்கு ஆஸ்திரேலிய மண்ணில் மேடையேற்றப்பட்டமை பாராட்டுக்குரியதாகும்.

போர்க்களங்களில் நாட்டுக்கூத்து வடிவம், அக்கால நிகழ்வுகளை எடுத்தியம்பும் வண்ணம் அரங்கேறின.

இன்று ஆஸ்திரேலியாவில் இத்தகைய நிகழ்வைக் காணும்போது மிக்க மனமகிழ்வடைகின்றோம். ஏனெனில் இளம் கலைஞர்களின் கலைநயமும், பாரம்பரியத்தை பேணிக்காக்கும் சேவையையும் என்றும் போற்றிப் பாராட்ட வேண்டியது அவசியமாகும்.

ஈழத்தின் பாரம்பரிய கலை வடிவங்களில் ஒன்றான நாட்டுக் கூத்துக் கலை அருகி வந்தாலும் பேர்த் நகர் வாழ் தமிழ் நெஞ்சங்கள் “வீர அபிமன்யு” கூத்தை குறுகிய காலத்தில் நெறிப்படுத்தி வழங்குகியுள்ளனர்.

இலங்கைப் பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்களால் “வீர அபிமன்யு” என்ற நாட்டுக்கூத்து இருபதாண்டுகளுக்கு முன்னர் பல மேடையேற்றங்கள் கண்டதாகும்.

வஞ்சகத்தால் வலையில் வீழ்த்தப்பட்டாலும் தரையில் தன்னந்தனியனாய் நின்று போரிட்டு வீரச்சாவை ஏற்றுக் கொண்ட “வீர அபிமன்யு”வின் இதிகாச புராணக் கதையைப் பறைசாற்றும் பாரம்பரிய நாட்டுக்கூத்தாகும்.

பேர்த் பாலமுருகன் ஆலய நிதி சேகரிப்பு நிகழ்ச்சியில் அலங்கேஸ் அருந்தவராஜா நெறியாள்கையில் வீர அபிமன்யு கூத்தை மக்கள் கண்டு களித்தனர்.

குருச்சேத்திரப் போரின் பதின்மூன்றாவது நாளில் கௌரவர்கள் சக்கர வியூகம் அமைத்துப் போரிட்ட வேளையில், கடும்போர் புரிந்த அபிமன்யு சக்கர வியுகத்தில் இருந்து வெளிவர முடியாமல் எதிரிகளின் வாளுக்குப் பலியான வீர வரலாற்றை பேர்த் வாழ் இளம் மாணவர்கள் கண்டு களித்தனர்.

இறுதியில் துரோணர், கிருபர், கர்ணன், அஸ்வத்தாமன், பிரஹத்பாலன், கிருதவர்மன் ஆகிய அறுவரால் தாக்கபட்டு நிலைகுலையும் அபிமன்யு, பின் துச்சாதனனின் மகன் துர்முகனோடு கதாயுத்தம் புரிந்து அவனைக் கொன்று தானும் மரணத்தைத் தழுவிய காட்சி பார்வையாளர்களின் மனதை நெருடியது.

பேர்த் நகரில் அரங்கேறிய “வீர அபிமன்யு”வின் கூத்துக் கலையின் சிறப்பம்சக் காட்சிகளையும், காட்சிச் சூழல்களையும் கணீரென்ற குரலில் பாடிய பாடகர்களின் பாடல்கள் சிறப்பாக வரலாற்றை விவரித்தன.

அத்துடன் மேடையில் நடனமாடிய நடிகர்களின் அபிநயமும் சேரவே காட்சி கற்பனையில் தோன்ற குருசேத்திரப் போர்க்களம் கண்முன்னே மிதக்க வைத்தது.

ஈழத்தில் பல கூத்துக்கள் ஆடப்பட்ட போதிலும் வீரஅபிமன்யுவே இன்றுவரை நிலைத்து நிற்கிறது. அத்துடன் எமது பாரம்பரிய கலைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய கடமையும் உள்ளது.

அருகிவரும் பாரம்பரியக் கலைகளை மேற்கு ஆஸ்திரேலிய பேர்த் மாநகரில் மேடையேற்ற எடுத்துக் கொண்ட முயற்சி பாராட்டுக்குரியதாகும்.






# கதிர்காமம் பாதயாத்திரை குழுவினருக்கு கல்லடி ராமகிருஷ்ண மிஷனில் வரவேற்பு

யாழ். – கதிர்காமம் பாதயாத்திரை குழுவினருக்கு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் குருகுலத்தில் நேற்று (11) செவ்வாய்க்கிழமை வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த மாதம் 11 திகதி யாழ். செல்வச்சன்னதி ஆலயத்திலிருந்து சிங்கராஜா ஜெயராஜா தலைமையிலே ஆரம்பமான பாதயாத்திரை யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு நேற்றுடன் ஒரு மாத காலத்தை பூர்த்தி செய்கின்றது.

குழுவினர் நேற்றுக் (11) காலை மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்திலிருந்து புறப்பட்டு கல்லடி இராமகிருஷ்ண மிஷன் குருகுலத்தை வந்தடைந்தனர்.

இராமகிருஷ்ண மிஷனின் மட்டக்களப்பு மாநில பொதுமுகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்த ஜி மகராஜ் விடுத்த அழைப்பை ஏற்று அங்கு அவர்கள் விஜயம் செய்தனர்.



இராமகிருஷ்ண ஆலயத்தில் பஜனையும் விசேட பூஜையும் இடம்பெற்றன.

காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், முன்னாள் பட்டிப்பளை மேற்கு பிரதேச சபை தவிசாளர் சிவஞானம் அகிலேஸ்வரன், உதவி கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, ஓய்வு நிலை ஆசிரியர் கவிமாமணிசாமி புண்ணியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிற்பகலில் அங்கு அனைவருக்கும் மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையிலான குழுவினர் இந்த மருத்துவமுகாமை நடத்தினர்.





# யாத்திரிகருக்குக் கல்லடியில் வைத்து சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவி!

கதிர்காமத்துக்குப் பாதயாத்திரை செல்வோருக்கு, சந்நிதியான் ஆச்சிரமத்தால் மட்டக்களப்பு – கல்லடி பகுதியில் வைத்து நேற்று (11) உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சைவமரபு, பாரம்பரியமிக்க கதிர்காம பாதயாத்திரையை தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் இருந்து மேற்கொண்டுள்ளபாத யாத்திரைக் குழுவினரை கல்லடியில் அமைந்துள்ள பேச்சி யம்மன் ஆலயத்தில் சந்தித்த கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் இந்த உதவிகளை வழங்கியுள்ளார்.

குளிர்பானம், பிஸ்கட் வகைகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கினார்.



# அட்டாளைச்சேனை ஸஹ்ராவில் கலாசார மண்டபம் திறந்து வைப்பு

(எம்.எப்.றிபாஸ்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்கு உட்பட்ட அட்டாளைச்சேனை தைக்கா நகர் ஸஹ்ரா வித்தியாலயத்தில் மாணவர்களின் நன்மை கருதி நிர்மாணிக்கப்பட்ட புதிய கலாசார மண்டபம் பாடசாலை அதிபர் எம். எஸ். எம். பைறூஸ் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

முஸ்லிம் ரிலீப் நிறுவனத்தின் அனுசரணையில் பிரதேச கலாசார உத்தியோகத்தர் எம்.எஸ்.ஜஃபரின் ஒருங்கிணைப்பின் கீழ் கட்டப்பட்ட இந்த மண்டபத் திறப்பு விழாவுக்கு அக்கரைப் பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.றகுமதுல்லா பிரதம அதிதியாகவும், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரி.எம்.இர்பான், முஸ்லிம் ரிலீப் நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.எம். மிஹ்லார். சட்டத்தரணி எம்.எஸ்.ஜுனைதீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.



நிகழ்வில் பாடசாலை அதிபரால் கலந்து கொண்ட அதிதிகளுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.






# முன்பள்ளி மாணவருக்குக் கற்றல் உபகரணம்

(ஆ.ரமேஸ்)

"கல்வியால் மலையகத்தில் சிகரம் தொடுவோம்" எனும் தொனிப்பொருளில் தாகம் தீர்க்கும் மேகம் என்ற அமைப்பு ஒரு லட்சம் ரூபா செலவில் அக்கரப் பத்தனை ஆகுரோவா தோட்ட பிரிடோ முன்பள்ளியில் பயிலும் 21 மாணவர்கள் பயன் பெறும் வகையில் பாடசாலை உபகரணங்கள் வழங்கிவைத்தது.

ஆகுரோவா கோயில் மண்டபத்தில் திங்கட்கிழமை (10) இடம்பெற்ற இந்த நிகழ்வின் அமைப்பின் தலைவர் பி.சுரேஸ் மற்றும் பொதுச் செயலாளர் செல்வராஜ் செல்வரோகனி ஆகியோர் கலந்து கொண்டு முன்பள்ளிச் சிறார் களுக்கு உபகரணங்களை வழங்கிவைத்தனர்.





# வாசிப்பைப் பரவலாக்குவதன் மூலம் மொழிக் கல்வியறிவில் மேம்படலாம்!

**சிட்னி நூல் வெளியீட்டில் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் உரை!**

புலம்பெயர் நாடுகளில் தமிழ் மொழியை அறியாமலேயே எதிர்கால குழந்தைகள் வளர வேண்டிய அவலம் நேர்கிறது. வெளிநாடுகளில் வாழ நேர்ந்துள்ள குழந்தைகளுக்கு தமிழ் மொழி மட்டுமல்ல, மொழியின் அடிப்ப டையில் உருவான பண்பாடு, இசை உள்ளிட்டவை எதுவும் தெரியாது முற்றி லும் அந்நியமான சூழ்நிலையிலே வளர நேரிட்டுள்ளது.

ஆயினும் இங்கு, ஆஸ்திரேலியாவில் பல்வேறு தமிழ் பாடசாலைகள் மாண வர்களுக்கு தமிழ் கற்பிப்பதையிட்டு மிக மகிழ்ச்சியாக உள்ளது.

இதேவேளை இன்றைய நிகழ்வான ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீட்டில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டமையை பார்க் கையில் மகிழ்ச்சியாக உள்ளது.

சிட்னியில் நிகழ்ந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகை யில்,

உலக மொழிகளில் இன்றளவும் தனது திறன் குன்றாது உயிர்ப்புடன் வாழ்வது தமிழ் மொழியே. இந்தப் பெருமை நீடித்து வளர்ந்தோங்கச் செயல்பட வேண்டியது நமது வரலாற்றுக் கடமையாகும்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு இலங்கை பத்திரிகைகள் பாரிய பங்களிப்பை ஆற்றி வருகின்றன.

கடந்தகால சமூகத்தின் சமய, சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டுப் பரப்புக்களின் போக்கில் பத்திரிகை ளின் செல்வாக்குக் குறைத்து மதிப்பிட முடியாதது.

வரலாறு எழுதுதலில் முதல்நிலைத் தகவல் வளங்களான பத்திரிகைகளின் உசாத்துணை அடிப்படையானதும் முக்கியமானதும் ஆகும். மக்களின் சிந்தனையில் பத்திரிகைகள் முக்கிய செல்வாக்குச் செலுத்துகின்றன அல்லது செலுத்த முற்படுகின்றன என்பதும் உண்மையே.

ஒவ்வொரு நாட்டிலும் பத்திரிகைத் துறை என்பது மிக முக்கிய கூறுகளில் ஒன்றாகும். சில நூற்றாண்டுகளுக்கு முன் சென்று பார்த்தோமானால், செய்தி மற்றும் தகவல்கள் எவ்வாறு சமூகத்தின் அடிப்படை அம்சமாக விளங்கியுள்ளன என்பதை அறியமுடியும்.

வாசிப்பைப் பரவலாக்கியதன் மூலம் கல்வியறிவில் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்படுத்திய இந்தப் பத்திரிகைகள் செய்திகளையும் தகவல்களையும் மக்களிடம் கொண்டு சென்று சேர்ப்பதில் முக்கிய பங்களிப்பை ஆற்றியுள் ளன.

இன்று பத்திரிகைகளே உலகளாவிய தொடர்பு மொழியாகப் பேருருவம் எடுத்துள்ளன. வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு மொழிகளில் பத்திரிகைகள் வெளிவந்தாலும், அவற்றின் பொதுக் கருத்து மக்கள் தொடர்பு என்பதேயா கும்.– என்றார்.

# யாழ். குடாநாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பு ஊற்று முன்னோடி பேராசிரியர் துரைராசா!

**கிளிநொச்சி பொறியியல் பீடத்தை உருவாக்கிய மாமனிதர் துரைராசாவின் 30 ஆவது நினைவு தினம் நேற்று (10) ஆகும்.**

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா.**

1988 செப்ரெம்பர் மாதம் ஈழத்தில் கொடூரமான போர்ச்சூழல் காரணமாக எவரும் வரத்தயங்கிய தருணம் துணிச்சலுடன் யாழ். பலகலைக்கழகத்தின் துணைவேந்தராக இன்முகத்துடன் ஒருவர் பதவி யேற்றார். அவர் யாருமல்ல, மண்ணின் மகுடமான மாமனிதர் பேராசிரியர் அழகையா துரைராசா தான்.

அவர் பதவியேற்க நிபந்தனையாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, யாழ். பல்கலைக்கழகத் தில் பொறியியற்பீடம் ஆரம்பிக்கபடும் என்று கொடுத் திருந்த வாக்குறுதியை பெற்றுக் கொண்டே அவர் பதவியேற்றுக் கொண்டார்.

யாழ். குடாநாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பின் ஊற்று அமைப்பின் முன்னோடியும், கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தை உருவாக்கிய தமிழ் மண் போற்றும் பேராசான் துரைராசாவின் முப்பதாவது நினைவு தினம் ஜூன் 10 ஆம் திகதி ஆகும்.

## அறிவியல் நகரில் பொறியியற் பீடம்!

1990 களில் யாழ்ப்பாணம் பொருளாதார சிக்கலில் தவித்திருந்த பொழுது, எல்லாத்தரத்திலான எல்லா வகையிலான கல்வியாளர்களையும், தொழில் நுட்பவியலாளர்களையும், தொழிலாளர்களையும், நிர்வாகிகளையும், சிவில் சமூகவியலாளர்களையும் ஒன்றிணைத்துப் பொருளாதார அபிவிருத்திக்கான எதிர்காலத் திட்டமிடலை மேற்கொண்டவரே மாமனிதர் பேராசான் துரைராசா.

தமிழ் பேசும் மக்கள் நற்சிறந்த கல்வியைப் பெறவேண்டும் என்பதற்காகப் பல்கலைக்கழகக் கல்வி முறையில் தொழிலாளர் கல்வி, வெளியார் கற்கை போன்றவற்றை அறிமுகப்படுத்தி யாழ்ப்பாண சமூகத்தை அறிவு கூட்டி பல்கலைக் கழகம் வரை கொண்டு வந்தவர்.

வடக்கு, கிழக்கு, மலையகத் தமிழர்களில் பெரும் பான்மையானோர் விவசாயிகளாக இருப்பதால் விவசாய பீடத்தை கிளிநொச்சியில் நிறுவியதில் முதன்மை வகித்தவரும் அவரே.

ஆனாலும் பேராசிரியரின் பெருங்கனவு பல வருடங்களின் பின்பே கிளிநொச்சி அறிவியல் நக ரில் யாழ். பல்கலைக் கழகத்தின் பொறியியற் பீட அங்குரார்ப்பண நிகழ்வுடன் பூர்த்தியாகியது எனலாம்.

பேராசிரியர் 1994 ஆம் ஆண்டு விழிமூடும்வரை, கொடிய நோயின் பிடியில் அவர் அகப்பட்டு இருந்தா லும், யாழ். பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக அளப்பெரும் சேவை புரிந்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத் தில், பேராசான் வதிவிடமான வடமராட்சியின் வதிரி பிரதேசத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்கு வல்லை வெளியூடாகப் போர் மேகங்கள் சூழ்ந்திருந்த காலங்களில் 30 இற்கும் மேற்பட்ட கிலோ மீற்றர்கள் தூரத்துக்குச் சைக்கிளில் பயணித்திருந்தார். மக்களின் துன்ப துயரங்களைத் தன் தோளில் தாங்கிய சிறந்த மண்ணின் பற்றாளர் அவர்.



## வடமராட்சியின் வீர மைந்தன்

மாமனிதர் பேராசான் துரைராசா யாழ்ப்பாணத்தின் மூளை என்று அழைக்கபடும் வடமராட்சி பிரதேசத்தில் பிறந்தார். யாழ்ப்பாணம் வடமராட்சியில் கம்பர்மலை என்னும் ஊரில் இமையாணனைச் சேர்ந்த வேலுப் பிள்ளை அழகையா- செல்லம்மா தம்பதியினருக்கு 1934 நவம்பர் 10 இல் பிறந்தார்.

இளமையில் ஆரம்பக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியிலும், உயர்தரக் கல் வியை ஹாட்லிக் கல்லூரியிலும் கற்று, 1953 ஜூலை யில் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பட்டப் படிப்பை மேற்கொண்டார்.

அதன்பின் குடிசார் பொறியியலில் 1957 ஆம் ஆண்டில் இளமாணிப் பட்டம் பெற்றார்.1958 மார்ச்வரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவு ரையாளராகப் பணியாற்றி, நான்கு மாதங்கள் பொதுப் பணித் திணைக்களத்தில் இளைய பொறியி யலாளராகப் பணியாற்றினார்.

புலமைப்பரிசில் பெற்று பேராசிரியர் கென்னத் ரொசுக்கோ வழிகாட்டலில் கேம்பிரிச்சுப் பல்கலைக் கழகத்தில் ஆய்வு மாணவனாகச் சேர்ந்தார்.

1958 ஒக்ரோபர் முதல் 1961 டிசெம்பர்வரை துரை ராசா மண்ணின் பண்புகள் பற்றிய ஆய்வில் ரொசுக் கோவுக்குப் பாரியளவில் உதவினார்.

## இங்கிலாந்தில் முனைவர் பட்டம்

இந்த ஆய்வின் மூலம் 1962 ஜூன் மாதத்தில் "கயோலின் மற்றும் மணலின் சில வெட்டுப் பண்புகள்" என்ற தலைப்பில் பேராசான் துரைராசாவுக்கு முனை

தொடர்ச்சி▼

# யாழ். குடாநாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பு ஊற்று முன்னோடி பேராசிரியர் துரைராசா!

தொடர்ச்சி▲

வர் பட்டம் கிடைத்தது.

முனைவர் பட்டம் பெற்ற துரைராசா, இலங்கை திரும்பும் முன்னர் லண்டனில் 1962 இல் டெரிசர்ச் என்ற நிறுவனத்தில் சிறிது காலம் பணி புரிந்தார். பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேரா தனை வளாகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தார்.

1971 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தில் குடிசார் பொறியியல் பேராசிரியராக ஆவதற்கு முன்பு கனடா, வாட்டர்லூ பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

மே 1975 முதல் செப்ரெம்பர் 1977 வரையும், பின்னர் பெப்ரவரி 1982 முதல் பெப்ரவரி 1985 வரையும் இலங் கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தில் பொறியியல் பீடத்தின் பீடாதிபதியாக பணியாற்றி யிருந்தார்.

## கொலம்பியா பேராசிரியர்

ஒக்ரோபர் 1977 முதல் டிசெம்பர் 1978 வரை பிரிட் டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பேரா சிரியராகப் பணியாற்றினார். ஏப்ரல் 1987 முதல் ஓகஸ்ட் 1988 வரை இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீடத்தின் பீடாதிபதியாக இருந்தார்.

போர் தீவிரம் பெற்ற தாயக மண்ணில் 1988 செப் ரெம்பர் முதல் 1994 மார்ச்வரை துரைராசா யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றினார். தனிப்பட்ட மருத்துவக் கார ணங்களுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து விலகி கொழும்பு சென்று அங்குள்ள திறந்த பல்கலைக்கழகத்தில் சிறிதுகாலம் பணியாற் றினார்.1994 ஜூன் 11 அன்று இரத்தப் புற்றுநோயால் ஏற்பட்ட இதய செயலிழப்பால் கொழும்பில் கால மானார்.

## தாயக மண்ணில் மாமனிதர் விருது

தமிழ்த் தாயக மண்ணில் பேராசான் ஆற்றிய பணிக்காக, இவர் இறந்த பின்னர் இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மாமனிதர் விருது வழங்கிக் கௌரவித்தனர்.

மண் போற்றும் மானுடவியலாளனான துரைராசா 1977 முதல் இலங்கை தேசிய அறிவியல் கல்விக் கழகத்திலும், 1979 முதல் இலங்கை குடிசார் பொறியி யல் நிறுவனத்திலும், 1985 மே முதல் ஐக்கிய இராச்சி யத்தின் குடிசார் பொறியியல் நிறுவனத்திலும் உறுப்பினராக இருந்தார்.

1986 இல் இவர் இலங்கை தேசிய அறிவியல் கல்விக்கழகத்தின் தலைவராகவும், ஒக்ரோபர் 1989 முதல் ஒக்ரோபர் 1990 வரை இலங்கை குடிசார் பொறியியல் நிறுவனத்தின் தலைவராகவும் இருந்து சேவையாற்றினார். இவர் மண் பொறியியலில் நிபுணராகவும் இருந்தார்.

## பேராதனை பல்கலையில் அக்பர் பாலம் அமைப்பு

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் 'அக்பர் பாலம்' பேராசிரியர் துரைராசாவால் அமைக் கப்பட்டது.

இந்தப் பாலம் சிங்கள பேராசிரியர் ஒருவர் விட்ட சவாலை ஏற்று மகாவலிகங்கைக்கு குறுக்கே ஒரேயொரு தூண் எழுப்பி பேராசிரியரின் தொழில் நுட்பத்தில் கட்டப்பட்டது.

பேராசிரியர் நினைவாகப் பேராசிரியர் துரைராசா கிண்ணம் எனும் சுற்றுபோட்டி வருடாவருடம் பேராதனை, கொழும்பு, மொரட்டுவ பல்கலைக ழகங்களுக்கு இடையில் இன்றும் இடம்பெற்று வருகிறது.

## உடுப்பிட்டி அமெ. மிஷன் கல்லூரி மாணவன்

பேராசிரியர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், இலங்கை சிவில் பொறியிலாளர்கள் அமைப்பு, தேசிய விஞ் ஞான அக்கடமி என்பவற்றின் தலைவராகவும் இருந்து அளப்பெரும் சேவைகள் ஆற்றியுள்ளார்.

1987 ஆம் ஆண்டு இடம்பெற்ற போர் அனர்த் தங்களில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி முற்றிலுமாக சிதைவடைந்திருந்த போது, வெளி நாடுகள் சென்று கல்லூரியின் நிலையை எடுத்து ரைத்து அங்குள்ள பழைய மாணவர்களை ஒன்று திரட்டி நிதி சேகரித்து இன்றைய உடுப்பிட்டி அமெ ரிக்கன் மிஷன் கல்லூரி நிமிர்ந்து நிற்பதற்கு பேரா சிரியரே துணை புரிந்தார்.

இன்றும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல் லூரியின் நூலகம் அமைந்த கட்டடத் தொகுதி பேரா சிரியரின் பெயராலேயே பேராசிரியர் துரைராசா கட்டட தொகுதி என்றே அழைக்கப்படுகிறது.

## யாழ்.விஞ்ஞான சங்கம்

1990 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்ட விவசாயத்துறை மாங்குளத்தில் நிறு வப்படவிருந்த பொறியியல் துறைக்கும், முல் லைத்தீவில் நிறுவப்படவிருந்த மீன்பிடித் துறைக் குமான பூர்வாங்க வேலைகள் பேராசிரியர் துரைராசா அவரது முயற்சியையும் பரந்த நோக்கத்தையும் வெளிப்படுத்துகின்றன.

யாழ். விஞ்ஞான சங்கம் 1992 இல் உருவானதும் பேராசியரின் சிந்தனையில்தான். அதன் ஸ்தாபக தலைவரும் இவரேயாவார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்த துறையை ஆரம்பிப்பதற்கு உரிய அங்கீகாரத்தைப் பெற்று அதனை நிர்வகிக்கத் தேவையான நிதியை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனது அயராத முயற்சியால் பேராசிரியர் துரைராசா திரட்டிக் கொண்டார்.

மேலும், பல்கலைக்கழகத்தில் உள்வாரி மாணவர் களாக படிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பெறாத மாணவர்களின் நலன் கருதி வெளிவாரி நிலையத்தை பேராசிரியர் துரைராசா உருவாக்கி பயன் பெறச் செய்தார்.

## தரைக்கீழ் நீர் சேமிப்பு ஊற்று அமைப்பு

1980 இல் ஊற்று என்ற அமைப்பை பேராசிரியர் துரைராசா உருவாக்கி, தலைவராக செயல்பட்டு

தொடர்ச்சி▼

# யாழ். குடாநாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பு ஊற்று முன்னோடி பேராசிரியர் துரைராசா!

தொடர்ச்சி▲

தனது முயற்சியால் பல அபிவிருத்தி திட்டங்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் உருவாக்கி கிராம மக்களை முன்னேற்றினார்.

அத்துடன் யாழ். குடாநாட்டின் தரைக்கீழ் நீர் சேமிப்பை ஊக்குவிக்கும் முகமாக 200 குளங்களின் வண்டல் மண் அகற்றும் திட்டம் 'நோராட்' நிறுவனத்தின் உதவியுடன் பேராசிரியர் துரைராசா மேற்கொண்டார். இதன் பின்னர் ஐக்கிய அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி திட்ட நிதி உதவியோடு பின்தங்கிய கிராமங்களின் வறுமை ஒழிப்புத் திட்டத்துக்கு இந்த நிறுவனமும் 'கெயர்' நிறுவனமும் இணைந்து அமுலாக்கிய உணவு உற்பத்தி திட்டத்தையும், 'போரூட்' இன் உதவியுடன் காடு வளர்ப்பு திட்ட அறிக்கை தயாரிப்பு வேலைகளும் பேராசிரியர் துரைராசா அவரின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்டன.

1990 ஆம் ஆண்டின் பின் வடபகுதியின் தன்னிச்சை பொருளாதார வளங்களின் அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கும் நிபுணர் குழுவுக்குத் தலைமை தாங்கி அதனை வழிநடத்திச் செல்ல பல திட்டங்கள் பேராசிரியர் துரைராசாவால் தயாரிக்கப்பட்டன.

பேராசிரியர் துரைராசாவை போன்ற கனவான்கள் இந்த மண்ணில் தோன்றுவது அரிது. பேராசிரியர் துரைராசா எளிமையின் சின்னமாக வாழ்ந்தவர். பெருமை அதிகாரம் இல்லாத மண்ணின் மனிதர்.

மாணவர்களானாலும் சரி, பொது மக்களாலும் சரி எந்நேரத்திலும் எவ்விடத்திலும் அவரை அணுகி தமது பிரச்சினைகளை எடுத்துக்கூறி அதற்கு அவர் மூலம் தீர்வொன்றை காணக்கூடிய பிறரை மதிக்கும் நற்குணமே அவருக்கு உயர்ச்சியைக் கொடுத்தது எனலாம்.

## இறந்தும் இறவா மாமனிதர் பேராசிரியர் துரைராசா

இறந்தும் இறவாத - மண்ணின் மகுடமாக மிளிர்ந்த மாமனிதர் என்ற அடைமொழி கற்பனையாக இருந்தாலும் அந்த அடைமொழி பேராசிரியர் அழகையா துரைராசாவின் பெயரின் முன்னால் இருக்கும்போது அது உயிரோட்டமாகவே இருக்கின்றது என அவரின் மாணவர் ஒருவர் எழுதிய வரிகள் காலங்கடந்தும் அவர் நம்முள் வாழ்கிறார் என்பதை எடுத்துக் கூறுகிறது.






# பேசாலை சென். மேரிஸ் வித்தி. இல்ல விளையாட்டுப் போட்டிகள்

(மன்னார்)

மன்னார் பேசாலை சென் மேரிஸ் வித்தியாலய ஆரம்ப பாடசாலையின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி திங்கட்கிழமை (10) மாலை பாடசாலை அதிபர் ஜே.எஸ்.வி.பீரிஸ் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் விருந்தினர்களாக பேசாலை உதவி பங்குத்தந்தை அருட்தந்தை எஸ்.அல்பன் ராஜ் அடிகளார், மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் செல்வி ஜி.ரி.தேவராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது மாணவர்களின் பல்வேறு விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி நிகழ்வுகள் இடம் பெற்றன.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் இல்லங்களுக்கான பரிசில்களும் விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டன.







# பல மாதங்களாக குவிந்துள்ள திண்ம கழிவுகளால் விசனம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை கிறீன் பீல்ட் வீட்டுத் திட்டத்துக்கு அருகில் அஸ்றப் ஞாபகார்த்த வைத்தியசாலைக்கு பின் பக்கமாக உள்ள நீரோடைக்கு அண்மையில் பல மாதங்களாக குவிந்துள்ள திண்ம கழிவுகள் கல்முனை மாநகர சபையால் இதுவரை அகற்றப்படாத குறித்து பிரதேசவாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தத் திண்மக் கழிவுகளில் விலங்கு கழிவுகளும் சேர்ந்துள்ளதால் துர்நாற்றம் வீசுகிறது. கால்நடைகள் இவற்றை கிளறுவதால் இந்தக் கூப்பைகள் பல இடங்களுக்கும் பரப்பப்படுவதால் வீதியில் பயணிக்க முடியாத நிலமை தோன்றியுள்ளது என்று பிரதேசவாசிகள் மேலும் தெரிவித்தனர்.



# சம்மாந்துறை பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நபர் கைது!

(சம்மாந்துறை நிருபர்)

சம்மாந்துறை பொலிஸாரால் மிக நீண்ட நாள்களாகப் பல்வேறு திருட்டுச் சம்பவம் மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் நேற்று முன்தினம் (10) கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் (10) திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட போது பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு சம்மாந்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேக நபர் திருகோணமலை, புல்மோட்டை, ஓட்டமாவடி, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, அக்கறைபற்று, திருக்கோவில், பொத்துவில் போன்ற பொலிஸ் பிரிவில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக விசாரணையை சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான குழுவினரின் மேற்கொண்டு வருகின்றனர்.



# இலங்கையில் போர் முடிந்துள்ள நிலையில் அபிவிருத்தியில் அமைச்சுகள், நிறுவனங்கள்!

## திகாமடுல்ல மாவட்ட எம்.பி. முஷாரப் தெரிவிப்பு

(நவாஸ், கே. எ. ஹமீட்)

ஜப்பானின் ஹிரோஷிமா மற்றும் நாகசாகி போன்ற நகரங்களின் மீது வீசப்பட்ட அணு குண்டுத் தாக்கங்களின் பின்னர் ஜப்பான் எவ்வாறு அபிவிருத்தியில் முன்னிலைக்கு வந்ததோ அவ்வாறே இலங்கையில் ஏற்பட்ட போராட்டத்தின் பின்னர் அமைச்சுக்களும் நிறுவனங்களும் அபிவிருத்திகள் தொடர்பில் கரிசனை கொண்டுள்ளன.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கல்முனை மற்றும் காரைதீவு உள்ளிட்ட பிரதேசங்களின் அபிவிருத்திக் குழுக்களின் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் இவ்வாறு தெரிவித்தார்.

சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். பாடசாலையில் மூன்று மாடிக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்காக ஆரம்ப கட்டமாக இரண்டு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்து குறித்த கட்டட வேலைகளை ஆரம்பிப்பதற்காகப் பிரதம அதிதியாக கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டிவிட்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜீ.எம்.எம்.எஸ். பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். இல்லியாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப்,

நான் பதவியேற்ற காலத்தில் கொரோனா என்றும் பொருளாதார நெருக்கடி என்றும் பல்வேறு தடைகள் வந்து அபிவிருத்தி விடயங்களில் கவனம் செலுத்த முடியாது போனது.

தற்போது அவ்வாறான நிலை மாறி அபிவிருத்தி விடயங்களில் கவனம் செலுத்தக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. அவற்றை முன்னெடுக்க முடியுமானவரை முயற்சிக்கிறோம்.-என்றார்.





நிகழ்வில் கௌரவ அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம், விஷேட அதிதியாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபீர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ஐ. சம்சுதீன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளரும் பாடசாலையின் பழைய மாணவருமான ஏ.எம். அஷாம் மௌலவி, பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ.எம்.றியாஸ், பிரதி அதிபர்களான திருமதி குறைசியா றாபிக், றின்ஷா பர்வின், உதவி அதிபர் எம்.ஏ.சி.எல். நஜீம், பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஆந்திராவின் முதல்வராக இன்று சந்திரபாபு நாயுடு பதவியேற்றார்

## பிரதமர் மோடி, அமித்ஷா நேரில் பிரசன்னம்









ஆந்திர முதலமைச்சராக தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு பதவியேற்றுக்கொண்டார்.

ஆந்திர சட்டப்பேரவைத் தேர்தலில் தெலுங்கு தேசம் தலைமையில் ஜன சேனை மற்றும் பா.ஜ.க. இணைந்து தேர்தலை சந்தித்தனர். இந்த தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்ற தெலுங்கு தேசம் கூட்டணி ஆட்சியை கைப்பற்றியது. 135 இடங்களில் தெலுங்கு தேசம் மட்டும் வெற்றி பெற்று தனிப் பெரும்பான்மை பெற்றது. இதையடுத்து, விஜயவாடா புறநகர் பகுதியின் கண்ணவரத்தில் இன்று நடைபெறும் பிரமாண்ட பதவியேற்பு விழாவில், 4 ஆவது முறையாக ஆந்திர முதல்வராக புதன்கிழமை சந்திரபாபு நாயுடு பதவியேற்றார். அவருக்கு கவர்னர் நசீர் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

ஆந்திர துணை முதல்வராக பவன் கல்யாண் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனசேனா கட்சி தலைவர் பவன் கல்யாண், சந்திரபாபு நாயுடு மகன் நாரா லோகேஷ் உட்பட 24 பேர் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர்.

ஆந்திர முதலமைச்சராக பதவியேற்ற சந்திரபாபு நாயுடுவுக்கு மலர் கொத்து வழங்கி, கட்டித்தழுவி பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார்.

ஆந்திர மாநில அமைச்சராக பதவியேற்றபின், தனது அண்ணன் நடிகர் சிரஞ்சீவி காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றார் பவன் கல்யாண்.

சந்திரபாபு நாயுடுவின் பதவியேற்பு விழாவில் பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள் அமித்ஷா, நட்டா, நிதின் கட்கரி, சிராக் பஸ்வான், ராம்தாஸ் அத்வாலே, மஹாராஷ்டிரா மாநில முதல்வர் எக்நாத் ஷிண்டே, நடிகர் ரஜினி, அவரது மனைவி லதா, நடிகர்கள் சீரஞ்சீவி, பால கிருஷ்ணன், முன்னாள் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, தமிழக முன்னாள் முதல்வர் பன்னீர் செல்வம், புதுச்சேரி மாநில முன்னாள் ஆளுநர் தமிழிசை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# உத்தரபிரதேசத்தில் ‘இண்டியா’ கூட்டணியின் ஆறு எம்.பிக்களின் பதவி பறிபோகும் அபாயம்!

## நிலுவையில் உள்ள குற்றவியல் வழக்குகளினால் சிக்கல்

உத்தரபிரதேசத்தில் மொத்தமுள்ள 80 நாடாளுமன்றத் தொகுதிகளில் இண்டியா கூட்டணியின் கீழ் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட சமாஜ்வாடி 37 இடங்களையும் காங்கிரஸ் 6 இடங்களையும் வென்றன. பா.ஜனதாவினால் 33 இடங்களை மட்டுமே கைபற்ற முடிந்தது.

இதனால் மத்தியில் மீண்டும் பா.ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைந்தாலும் சக்தி வாய்ந்த எதிர்க்கட்சியாக இண்டியா கூட்டணி இடம் பெற்றது. இதற்கு உத்தரபிரேதசத்தில் அவர்கள் வென்ற 43 இடங்கள் முக்கிய காரணமாக அமைந்து உள்ளன.

இந்த நிலையில், இண்டியா கூட்டணியின் கீழ் போட்டியிட்டு வெற்றி பெற்ற உத்தரபிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்களில் 6 பேர் மீது உள்ள வழக்குகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்களது பதவி பறிபோகும் அபாயம் உள்ளது.

இதில், காஜிபூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்ட சமாஜ்வாடி வேட்பாளர் அப்சல் அன்சாரி பா.ஜ.க.வின் பராஸ்நாத் ராயை 1,24,861 வாக்குகள் வித்தியாசத்தில் தோறகடித்தார். இவர் மீது ஏற்கெனவே குண்டர் சட்டத்தில் விதிக்கப்பட்ட 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டதால் அவரால் இம்முறை தேர்தலில் போட்டியிட முடிந்தது.



ஜூலை மாதம் அவரது வழக்கில் வழங்கப்பட இருக்கும் தீர்ப்புதான் அவரது புதிய எம்.பி. பதவி நீடிக்கப்படுமா அல்லது பறிக்கப்படுமா என்பதை தீர்மானிக்கும்.

இதேபோன்று அசம்கார் தொகுதியில் வென்ற தர்மேந்திரயாதவ் மீது 4 வழக்குகள் நிலுவையில் உள்ளன. ஒருவேளை அவருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டால் அவரது எம்.பி. பதவியும் பறிபோகும்.

ஜான்பூர் தொகுதியில் வெற்றி பெற்ற சமாஜ்வாடி கட்சியின் பாபு சிங் குஷ்வாஹா மீது உள்ள சொத்து மோசடி உள்ளிட்ட 8 வழக்குகளில் ஏதேனும் ஒன்றில் அவருக்கு எதிராக நீதிமன்ற தீர்ப்பு அளிக்கப்பட்டாலும் அவரது எம்.பி. பதவியும் கைவிட்டுப் போய்விடும்.

சுல்தான்பூர் தொகுதியில் பா.ஜனதா வேட்பாளர் மேனகா காந்தியை தோற்கடித்த ராம்புவால் நிஷாத் மீது குண்டர் சட்டம் உட்பட 8 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. சந்தவுலி தொகுதியில் பா.ஜ.க.வின் மகேந்திரநாத் பாண்டேவை தோற்கடித்த சமாஜ்வாடியின் வீரேந்திர சிங் மீதும் குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன.

சஹாரன்பூர் தொகுதியில் வெற்றி பெற்ற காங்கிரஸ் தலைவர் இம்ரா மசூத் மீது அமலாக்கத்துறை பண மோசடி வழக்கு தாக்கல் செய்திருப்பதால் அவரது எம்.பி. பதவிக்கும் ஆபத்து காத்திருக்கிறது.

இறுதியாக, உ.பி.யில் சுயேச்சையாக வென்ற பட்டியலின தலைவர் சந்திர சேகர் ஆசாத்மீது 30 வழக்குகள் தொடுக்கப்பட்டு இருப்பதால் அவரது அரசியல் வாழ்க்கைக்கே பேராபத்து நேரும் அபாயம் உள்ளது.

இதனால் குற்ற வழக்குகளில் சிக்கி உள்ள இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் 6 பேரின் தண்டனை உறுதியானால் அவர்களின் பதவி பறிபோகும் நிலை உள்ளது.



# அகதிகளை ஏற்றி வந்த படகு கவிழ்ந்து விபத்து ஏமனுக்கு அருகே கடலில் மூழ்கி 49 பேர் பலி!

## இன்னும் 140 பேரைக் காணவில்லை என்று தேடுதல்

சனா,ஜூன்12

ஏமன் கடற்கரை அருகே அகதிகளின் படகு கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் 49 பேர் உயிரிழந்தனர்.

கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து ஏராளமான மக்கள் ஏமன் வழியாக வளைகுடா நாடுகளுக்கு வேலை தேடி அகதிகளாக செல்கின்றனர். ஏமன் நாட்டில் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும், அரசுப் படையினருக்கும் இடையே பல ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடைபெற்று வரும் நிலையிலும், அங்கு அகதிகளாக வருபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் சோமாலியா மற்றும் எத்தியோப்பியாவில் இருந்து சுமார் 260 அகதிகளை ஏற்றிக்கொண்டு ஏடன் வளைகுடா வழியாக படகு ஒன்று சென்று கொண்டிருந்தது. இந்த படகு நேற்று முன்தினம் இரவு ஏமன் கடற்கரை அருகே வந்தபோது கடலில் கவிழ்ந்து விபத்திற்குள்ளானது. இந்த விபத்து குறித்து தகவலறிந்து மீட்பு படையினர் விரைந்து சென்று மீட்பு பணிகளில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் 31 பெண்கள், 6 குழந்தைகள் உள்பட 49 பேர் உயிரிழந்தனர் எனத்தகவல் வெளியாகியுள்ளது.

இதுவரை 71 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ள நிலையில், சுமார் 140 பேரை காணவில்லை என்றும், அவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் ஐ.நா. சர்வதேச அகதிகள் அமைப்பு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் மகன் குற்றவாளி என மன்று தீர்ப்பு

வொஷிங்டன்,ஜூன் 12

துப்பாக்கியைச் சட்ட விரோதமாக வாங்கிய வழக்கில் அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் மகன் குற்றவாளி என அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அமெரிக்கா அதிபராக இருக்கும் ஜோ பைடனின் மூத்த மகன் ஹண்டர் பைடன். இவர் மீது கடந்த 2018 ஆம் ஆண்டு சட்டவிரோதமாகத் துப்பாக்கி வாங்கியதாக குற்றம் சாட்டப்பட்டது. இது தொடர்பாக மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அந்த வழக்குகளின் மீதான விசாரணை அந்நாட்டு நீதிமன்றத்திக் நடைபெற்று வந்தது.

இந்நிலையில் சட்டவிரோதமாக துப்பாக்கி வாங்கிய குற்றச்சாட்டுகளில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன்



மகன் ஹண்டர் பைடன் குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. முதல் இரண்டு வழக்குகளில் தலா 10 ஆண்டுகள், மூன்றாவது வழக்கில் 5 ஆண்டுகள் என அதிகபட்சம் 25 ஆண்டுகள் வரை ஹண்டர் பைடனுக்கு தண்டனை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

அதேநேரம் அவரது தண்டனை விவரங்கள் அறிவிக்கப்படவில்லை. அமெரிக்க சட்டப்படி குற்றவாளி என அறிவிக்கப்பட்டவருக்கு 120 நாள்களில் தண்டனை விவரம் அறிவிக்கப்பட வேண்டும். அமெரிக்க அதிபர் தேர்தல் வரும் நவம்பர் மாதம் நடக்க உள்ள நிலையில், அதற்குள் தண்டனை விவரம் அறிவிக்கப்பட உள்ளது.

இந்தத் தீர்ப்பு வெளியான பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க அதிபர் பைடன், நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறார் எனத் தெரிவித்தார். அதேநேரம் இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன் முறையீடு செய்வது குறித்தும் ஆலோசிக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

பக்கங்கள் - 7

# கனடா முரசு

புதன்கிழமை 12/06/2024

## வின்னிபெக்கில் கத்திக் குத்து!

மனிடோபா, ஜுன் 12

வின்னிபெக்கின் சென்ரல் பார்க் பகுதியில் இடம்பெற்ற கத்திக் குத்து சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். C2 ▶



# கனடிய அரசாங்கம் தன் பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை!

**கனடிய அரசாங்கம் இந்த கோடை காலத்தில் வெளிநாடுகளுக்கு பயணங்களை மேற்கொள்ளும் தமது நாட்டு பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுத்துள்ளது.**

**கோடைகாலத்தில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் பல்வேறு நாடுகளுக்கு சுற்றுலா மேற்கொள்வது வழமையானதாகும்.**

**இம்முறை பயணங்களை மேற்கொள்ள திட்டமிட்டிருப்பவர்களுக்கு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

**குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் தீவிரவாத அச்சுறுத்தல் காணப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.**

**மேலும் உலகின் வேறும் சில பிராந்தியங்களிலும் இவ்வாறு அச்சுறுத்தல்கள் நிலவுவதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.**

ஐரோப்பாவின் சில நகரங்கள் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனவும் இது குறித்து அவதானத்துடன் செயல்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் தாக்குதல் இடம் பெற்று பலர் உயிரிழந்துள்ளமையுடன் காயமடைந்திருந்தனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் கோடை காலத்தில் பிரான்ஸின் பாரிஸ் நகரில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ளன.

எனவே அந்தப் பகுதியில் தீவிரவாத அச்சுறுத்தல்கள் அதிக அளவில் காணப்படுவதாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ், இத்தாலி, பஹாமாஸ் போன்ற நாடுகளில் தீவிரவாத அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் உள்நாட்டு செய்தி ஊடகங்களின் தகவல்களின் அடிப்படையில் செயற்படுமாறும் கனடிய அரசாங்கம் தமது நாட்டு பிரஜைகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

## தமிழீழப் பெண்கள் உதைபந்தாட்ட அணியில் பங்கேற்ற கனடா வீராங்கனைகள் திரும்பினர்

ஒன்ராரியோ, ஜுன் 12

தமிழீழப் பெண்கள் உதைபந்தாட்ட அணியில் கனடாவில் இருந்து சென்று பங்கேற்ற எட்டு வீராங்கனைகள் நாடு திரும்பியுள்ளனர்.

அங்கீகரிக்கப்படாத நாடுகளுக்கான உலக பெண்கள் உதைபந்தாட்ட போட்டியில் கனடாவில் இருந்து சென்று பங்கேற்ற தமிழீழ அணியின் எட்டு வீராங்கனைகள் நாடு திரும்பியுள்ளனர்.

2024ஆம் ஆண்டுக்கான கொனீபா மகளிர் உதைபந்தாட்ட உலகக் கிண்ண போட்டி நோர்வே நாட்டில் நடைபெற்றது.

இந்த தொடரில் தமிழீழ அணியின் சார்பில் கனடியத் தமிழ் வீராங்கனைகளும் பங்கேற்றனர்.

கனடியத் தமிழர்களான C2 ▶



# மூலதன ஆதாயத் திட்டம் நேற்று நிறைவேற்றப்பட்டது

**ஒன்ராரியோ, ஜுன் 11**

லிபரல் அரசாங்கத்தின் மூலதன ஆதாயத் திட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று (ஜுன் 11) நிறைவேற்றப்பட்டது.

ஜுன் 11ஆம் திகதி இடம்பெற்ற இந்த வாக்களிப்பில் பிரேரணைக்கு, 208 க்கு 118 என்ற வாக்குகளால் நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது.

லிபரல் அரசாங்கத்தின் இந்தத் திட்டத்திற்கு புதிய ஜனநாயகக் கட்சி, புளொக் கியூபெக் ஆகிய கட்சிகள் ஆதரவாக வாக்களித்தன.

இந்த திட்டத்திற்கு எதிராக வாக்களிக்கப் போவதாக கன்சர்வேட்டிவ் கட்சி ஏற்கனவே அறிவித்திருந்தது.

லிபரல் அரசாங்கத்தின் மூலதன ஆதாய திட்டத்தை நிதி அமைச்சர் கிறிஸ்டியா பிரிலேண்ட் திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் முன் வைத்தார்.




# உலகின் மிகப்பெரிய ஐஸ் குச்சி நிர்மாணம் கனடாவின் அல்பர்ட்டாவில் மக்கள் முயற்சி

கனடாவில் அல்பர்ட்டா மாகாணத்தில் உலகின் மிகப்பெரிய ஐஸ் குச்சி கட்டுமானத்தை உருவாக்கும் சாதனை முயற்சி முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

உலகில் மிகவும் உயரம் கூடிய ஐஸ் குச்சியை உருவாக்குவதற்கு தென் அல்பர்ட்டாவின் ஹட்டரைட் மக்கள் முயற்சி எடுத்து வருகின்றனர்.

மியாமி ஹட்ரைட் பாடசாலையின் மாணவர்கள் இந்த மிகப்பெரிய ஐஸ் குச்சி வடிவமைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரையில் இந்த ஐஸ் குச்சி 88.9 அடி உயரம் வரையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னதாகவே மாணவர்கள் இவ்வாறான ஓர் ஐஸ் குச்சியை உருவாக்கத் திட்டமிட்டிருந்தனர்.

ஒகியோவை சேர்ந்த ஒருவர் 21 அடி உயரமான ஐஸ் குச்சி வடிவத்தை உருவாக்கி இருந்தார்.

அதன் பின்னர் ஆல்பர்ட்டா பள்ளி மாணவர்கள் இந்த ஐஸ் குச்சி உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு 41 அடி உயரமான ஐஸ் குச்சியை உருவாக்கி இருந்தனர்.

இது கின்னஸ் உலக சாதனையாகக் காணப்பட்டது.

ஆறு மாத கால இடைவெளியில் பிரேசிலை சேர்ந்த ஒருவர் 77.9 அடி உயரமான ஐஸ் குச்சியை உருவாக்கி இந்தச் சாதனையை முறையடித்தார்.

இதனைத் தொடர்ந்து மீண்டும் அல்பர்ட்டா பள்ளி மாணவர்கள் இந்த சாதனையை முறியடிக்கும் நோக்கில் புதிய முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சுமார் 40,000 ஐஸ் குச்சிகளை ஒன்றிணைத்து பாரிய அளவிலான ஓர் ஐஸ் குச்சியை உருவாக்க அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

சுமார் 125 அடி உயரமான ஐஸ் குச்சியை உருவாக்குவது தங்களுடைய நோக்கம் என மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்பொழுது இந்த ஐஸ் குச்சி 88 தசம் 9 அடி உயரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஐஸ் குச்சி கட்டமைப்பை உருவாக்கும் போது பல்வேறு சவால்களை எதிர் நோக்க நேரிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வின்னிபெக்கில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சம்பவத்தில் காயமடைந்த நபர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜுன் 11ஆம் திகதி காலை 11:50 அளவில் கம்பர்லேண்ட் அவனியுக்கு அருகில், கென்னடி வீதியில் இந்த சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தமிழீழப் பெண்கள்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து வீராங்கனைகள், அணி முகாமையாளர், அணி உதவி முகாமையாளர், அணி மருத்துவர் ஆகியோர் ஜுன் மாதம் 10ஆம் திகதி கனடா திரும்பினர்.

கால்பந்தாட்ட வீராங்கனைகளான ப்ரீத்தி சுரேஷ்குமார், பிரிந்திகா ஐங்கரமூர்த்தி, மாயா சத்யன், ஓவியா சத்யன், மெலனி சுரேஷ்குமார் ஆகியோருடன் அணி முகாமையாளர் சங்கரி ஸ்ரீதயாகுமார், அணி உதவி முகாமையாளர் அகனி சிதம்பரநாதன், அணி மருத்துவர் அபி சண்முகரத்தினம் ஆகியோர் கனடா திரும்பினர்.

இவர்களுக்கு டொரன்டோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் கூடியிருந்த குடும்பத்தினர் நண்பர்களால் வரவேற்பு வழங்கப்பட்டது.



# ஒன்ராரியோ, மனிடோபா, கியூபெக்கில் கொடிய நுண்ணுயிர்த் தொற்றுப் பரவல்

ஒன்ராரியோ, ஜுன் 12

கொடிய நுண்ணுயிர்த் தொற றொன்றின் பரவல் மூன்று மாகாணங் களில் பதிவாகியுள்ளது.

இந்த அரிய நுண்ணுயிர் தொற்றுக் குறித்து மூன்று மாகாணங்களில் உள்ள பொது சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஒன்ராரியோ, மனிடோபா, மற்றும் கியூபெக் ஆகிய மாகாணங்களில் இந்த நுண்ணுயிர் தொற்று அதிக ரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

இந்த நுண்ணுயிர் தொற்று மூளைக் காய்ச்சல் மற்றும் மரணத்திற்கு வழி வகுக்கும் எனப் பொது சுகாதார அதி காரிகள் எச்சரிக்கின்றனர்.

ஒரு தினத்திற்குள் இந்த தொற்றின் தாக்கம் உடல் நிலையை மோசமடை யச் செய்யும் எனக் கூறப்படுகிறது.

2024ஆம் ஆண்டு டொரன்டோ வில் இந்த வகையிலான 13 தொற்றுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2002க்குப் பின்னர் எந்தவொரு வருடத்திலும் பதிவான மொத்தத் தொற்றுகளின் எண்ணிக்கையை விட இது அதிகமானதாகும்.

அண்மையில் டொரன்டோவில் இந்த தொற்றின் தாக்கத்தால் ஒரு பெரியவரும் ஒரு குழந்தையும் உயிரிழந்தனர்.




# ஸ்கார்பரோ தொடர் மாடி கட்டடத்தில் வசிப்பவர்கள் அவசரமாக வெளியேற்றம்

## காபன் மொனொக்சைட் வாயு கசிவு கண்டறியப்பட்டதால்

ஒன்ராரியோ, ஜுன் 12

தமிழர்கள் அதிகம் வாழும் ஸ்கார் பரோ தொடர் மாடி கட்டடம் ஒன்றில் வசிப்பவர்கள் அவசரமாக வெளியேற் றப்பட்டுள்ளனர்.

அதிக அளவில் காபன் மொனொக் சைட் வாயு கசிவு கண்டறியப்பட்டதை அடுத்தே இந்த தொடர் மாடி கட்டடத் தில் வசிப்பவர்கள் வெளியேற்றப்பட்டுள் ளனர்.


மாரக்கம் வீதியில் நெடுஞ்சாலை 401க்கு தெற்கே உள்ள 30 டக்சிடோ கோர்ட் தொடர் மாடி கட்டடத்தில் வசிப்ப வர்களே வெளியேற்றப்பட்டவர்களாவர்.

செவ்வாய்க்கிழமை காலை இந்த




கசிவு முதலில் கண்டறியப்பட்டதாக டொரன்டோ பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இந்த சம்பவத்தில் எவருக்கும் காயங் கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரி விக்கப்படுகின்றது.




# கனடிய எல்லை சேவை ஊழியர்களின் வேலை நிறுத்தம் தவிர்க்கப்பட்டுள்ளது

ஒன்ராரியோ, ஜுன் 12

கனடிய எல்லை சேவைகள் நிறுவனத்தின் ஊழியர்களின் வேலை நிறுத்தம் தவிர்க்கப்பட்டுள்ளது.

இதற்கான தற்காலிக ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளதாக தொழிற்சங்கம் நேற்று தெரிவித்துள்ளது.

இதன் மூலம் கனடாவின் எல்லை தொழிலாளர்கள் இந்த வாரம் திட்டமிட்ட வேலை நிறுத்தம் தவிர்க்கப்பட்டுள்ளது.

கனடாவின் பொதுச் சேவை கூட்டணி, சுங்க, குடிவரவு ஒன்றியம் ஆகியவற்றின் தொழிற்சங்கம் மத்திய அரசாங்கத்துடன் ஒரு தற்காலிக உடன்பாட்டை எட்டியுள்ளது.

இந்த இரண்டு அமைப்புக்களும் இணைந்து 9,000க்கும் மேற்பட்ட CBSA தொழிலாளர்களை பிரதிநிதிகளாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தது.



# டீன் ஏஜ் குழுவினரிடையே களேபரம்

## 15 வயதுச் சிறுவனுக்குக் கத்திக்குத்து

டொரன்டோ, ஜுன் 12

டொராண்டோ நகரின் வெஸ்டன் சுற்றுப்புறத்தில் உள்ள ஒரு பாடசாலைக்கு அருகே நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் டீனேஜ் கணக்கான பதின்ம வயதினர் சம்பந்தப்பட்ட ஒரு பெரிய சச்சரவில் 15 வயது சிறுவனைக் கத்தியால் குத்தப்பட்டுள்ளான். இது குறித்து டொராண்டோ பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பிற்பகல் 3.30 மணிக்கு முன்னதாக அதிகாரிகளுக்கு இந்த சம்பவம் தொடர்பில் அழைப்பு வந்தது.

ஜேன் ஸ்ட்ரீட் மற்றும் லாரன்ஸ் அவென்யூ வெஸ்ட் பகுதியில் உள்ள எல்லிஸ் அவென்யூவில் ஒரு குழுவினரிடையேயான ஏற்பட்ட பெரிய களேபரம் குறித்துத் தகவல் வந்தது என பதில் இன்ஸ்பெக்டர் டோட் ஜோக்கோ கூறினார்.

வெஸ்டன் காலேஜியேட் இன்ஸ்டிடியூட் அருகே தொடங்கிய வாக்குவாதத்தில் பதின்ம வயதினர் 30 பேர் வரை ஈடுபட்டனர் என டோட் ஜோக்கோ குறிப்பிட்டார்.

பதின்ம வயதினரில் சிலர் பின்னர் இழுபறிப்பட்டு ஓடி எல்லிஸ் அவென்யூவிற்குச் சென்றனர். அங்கு வயிற்றுப் பகுதியில் கத்தியால் குத்தப்பட்ட நிலையில் 15 வயதுச் சிறுவனை அதிகாரிகள் பின்னர் கண்டு மீட்டனர்.

ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ள சிறுவன் ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விட்டான் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் வேறு இரு பதின்ம வயதினரும் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

# ஈஸ்ட் யோர்கில் கத்திக் குத்தில் மூவருக்குக் காயம்

கனடாவில் இடம்பெற்ற கத்தி குத்து தாக்குதல் சம்பவத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் தாக்குதலை மேற்கொண்டவர் எனச் சந்தேகிக்கப்படும் நபரும் உள்ளடங்குகின்றார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ரொறன்ரோவின் ஈஸ்ட் யோர்க் பகுதியின் டான்போர்த் மற்றும் தியாரா வீதிகளுக்கு அருகாமையில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மூன்று ஆண்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் இறுதியில் கைகலப்பாக மாறி கத்தி குத்தில் முடிவடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தாக்குதலில் காயமடைந்த மூவருக்கும் உயிராபத்து கிடையாது என வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கத்தி குத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் வைத்தியசாலை சிகிச்சையின் பின்னர் பொலிஸாரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கத்தி குத்து தாக்குதல் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# கியா ரக வாகனங்களைப் பயன்படுத்துகின்ற கனடிய வாடிக்கையாளர்களுக்கு எச்சரிக்கை

கனடாவில் கியா எஸ்யூவி (Kia SUV) ரக வாகனங்களை பயன்படுத்துவோருக்கு அவசர எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கியா எஸ்யூவி (Kia Telluride SUV) ரக வாகனங்கள் தீப்பற்றிக் கொள்ளும் சாத்தியம் காணப்படுவதாக எச்சரிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே வாகனங்களை வீட்டுக்கு வெளியே நிறுத்தி வைக்குமாறும் வாகன பயனர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கியா நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டு கனடாவில் விற்பனை செய்யப்பட்டுள்ள Telluride SUV ரக வாகனங்கள் சுமார் 20, 563 இந்தக் கோளாறினால் பாதிக்கப்பட்டுள்ளன எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

கடந்த 2020 முதல் 2024 ஆம் ஆண்டு வரையில் இந்த மாடல்கள் வெளியிடப்பட்டிருந்தன.

அமெரிக்காவிலும் இதே போல 462,869 டெல்லூரைடு மாடல்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வாகனங்கள் பழுது பார்க்கப்படும் வரையில் வாகனத்தை வீட்டுக்கு வெளியே நிறுத்துமாறும் அருகாமையில் வேறு வாகனங்களை நிறுத்த வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வாகனங்களை வைத்திருப்போருக்கு கியா நிறுவனம் மின்னஞ்சல் மூலம் அறிவுறுத்தல் வழங்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாகனங்களை கியா விநியோகத்தர்களிடம் கொடுத்து பழுது பார்த்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வாகனத்தை பயன்படுத்திய எவரும் விபத்துகளினால் காயமடையவோ அல்லது உயிரிழக்கவோ இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

யு.எஸ். தேசிய நெடுஞ்சாலை போக்குவரத்து பாதுகாப்பு நிர்வாகத்தின் கூற்றுப்படி வாகனத்தின் முன் இருக்கையை சரி செய்யும் பிடியினால் இயக்கப்படுகின்ற மோட்டர் தன் பாட்டிலேயே இறுகி, வெப்பமடையச் செய்து, தீயை உருவாக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகின்றது. இது, வாகனம் நிறுத்தப்பட்டிருக்கும் போது அல்லது ஓட்டும்போது நடக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

# இந்தக் கோடை காலம் கனடாவில் வழமைக்கு மாறாக சூடாக இருக்கும்




கனடாவில் இந்த கோடை காலத்தில் வழமைக்கு மாறான அடிப்படையில் கூடுதல் வெப்பநிலையை நிலவும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கனடிய சுற்றாடல் திணைக்களம் இந்த முன் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

சராசரியாகக் கோடைகாலத்தில் காணப்படும் வெப்பநிலையை விடவும் இந்தக் கோடை காலத்தில் கூடுதல் வெப்பநிலை நிலவும் என கனடிய சுற்றாடல் திணைக்களத்தின் வானியல் ஆய்வாளர் ஜெனிபர் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

கனடிய கால நிலையில் ஏற்படும் மாற்றம் | Canadians Can Expect Above Seasonal Temperatures கோடைகால மாதங்களில் தொடர்ச்சியாக வெப்பநிலை அதிகரித்து செல்லும் போக்குப் பதிவாகும் என அவர் எதிர்வு கூறியுள்ளார்.

இந்த கோடை காலத்தில் கால நிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும் எனவும் வெப்ப அலை ஏற்படலாம் எனவும் சில சந்தர்ப்பங்களில் குளிருடனான காலநிலை நிலவும் எனவும் அவர் எதிர் கூறியுள்ளார்.

பொதுவாக அதிக வெப்பநிலையான வறட்சியான ஒரு காலநிலை எதிர்வரும் நாள்களில் நீடிக்கும் எனவும் அதற்கு மக்கள் ஆயத்தமாக இருப்பது பொருத்தமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காட்டு தீ பரவுகை காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்தும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த பருவ காலத்தில் காலநிலை மாற்றங்கள் நிச்சயமற்ற தன்மையை வெளிப்படுத்தும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.




# கனடாவில் கோர விபத்தில் ஈழத்தமிழ் இளைஞன் சாவு!

கனடாவில் இடம்பெற்ற கோர விபத்தில் ஈழத்தமிழ் இளைஞன் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

ஒன்டாரியோவின் மார்க்கம் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் கடந்த இரண்டாம் திகதி அதிகாலை விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நயினாதீவை சேர்ந்த பெற்றோரின் பிள்ளையான 25 வயதான ஜெயகுமார் தனோஷன் என்பரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நள்ளிரவில் வேகமாக பயணித்த வாகனம் கொங்ரீட் தூணில் மோதுண்ட நிலையில் விபத்து ஏற்பட்டுள்ளதாக ஒன்ராறியோ மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனத்தை ஓட்டிச் சென்ற தமிழ் இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனம் மோதியதற்கு என்ன காரணம் என்பது தெளிவாகத் தெரியவில்லை. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# தந்தையர் தினத்திற்காக ஒன்றாரியோ மாகாண அரசு அறிவித்துள்ள சலுகை!

எதிர்வரும் தந்தையர் தினத்திற்காக கனடாவின் ஒன்றாரியோ மாகாண அரசாங்கம் விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 15 மற்றும் 16ஆம் திகதிகளில் மாகாணத்தின் நதிகள் மற்றும் குளங்களில் இலவசமாக மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்குவதாக அறிவித்துள்ளது.

தந்தையர் தின வார இறுதி நாள்களில் இந்த சலுகையை வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அழகிய நதிக்கரைகளில் மீன் பிடித்து கொண்டாடி மகிழ்வதற்கு மக்களுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுப்பதாக மாகாண அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஒன்றாரியோ மாகாணத்தின் இயற்கை வள அமைச்சர் க்ரைடோன் ஸ்மித் இந்த விடயத்தை அறிவித்துள்ளார்.


மீன் பிடியில் ஈடுபடுவது ஒட்டுமொத்த குடும்பத்தினருக்கே மகிழ்ச்சியானது என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மாகாணத்தில் பல்வேறு மீன் வகைகள் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நீர் நிலைகளில் மீன்பிடியில் ஈடுபடும்போது மீன்பிடித்தல் தொடர்பான விதிமுறைகளுக்கு உட்பட்டு மீன்பிடியில் ஈடுபடுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றாயோவில் வழமையாக 18 முதல் 65 வயது வரையிலானவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு உரிமம் ஒன்றை வைத்திருக்க வேண்டியது அவசியமானது என்பது குறிப்பிடத்தக்கது.

தந்தையர் தினத்தை முன்னிட்டு இலவசமாக நீர் நிலைகளில் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



# முதுகெலும்புக்குள்ளே ஊசியை வைத்து தைத்து அனுப்பிய கனடிய மருத்துவமனை

## வேதனையில் துடிக்கும் ஒன்ராறியோவைச் சேர்ந்த பெண்

கனடாவில், தோள் மற்றும் கால் வலியால் தவித்துவந்த ஒரு பெண் மருத்துவமனைக்குச் செல்ல, அவரது எக்ஸ்ரே பெரிய உண்மை ஒன்றை வெளிக்கொண்டுவந்தது.

ஒன்ராறியோவைச் சேர்ந்த Giovanna Ippolito தோள் மற்றும் கால் வலியால் தவித்துவந்துள்ளார். ஒரு நாள் அவர் மருத்துவமனைக்குச் சென்றபோது அவருக்கு எக்ஸ்ரே எடுக்கப்பட்டுள்ளது.

அந்த எக்ஸ்ரே பயங்கர உண்மை ஒன்றை வெளிக்கொணர்ந்தது. ஆம், அவரது முதுகெலும்புக்குள் உடைந்த ஒரு ஊசியின் ஒரு பெரிய துண்டு இருப்பது தெரியவந்தது.

அந்த ஊசியுடனேயே அவர் பல ஆண்டுகளாக வாழ்ந்துவந்துள்ளார். அத்துடன், அந்த ஊசிதான் தனது தோள் மற்றும் கால்வலிக்கும் காரணம் என்பது அவருக்கு பிறகுதான் தெரியவந்துள்ளது.

கனடாவில், 2023ஆம் ஆண்டில் மட்டும், மருத்துவர்களின் கவனக்குறைவு காரணமாக, சுமார் 175,000 நோயாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக்கனேடிய உடல்நலதகவல் நிறுவனமான Canadian Institute for Health Information (CIHI) தெரிவித்துள்ளது.



மேலும், 2022இல் 168,000 நோயாளிகளும், 2021இல் 157,000 நோயாளிகளும், மருத்துவர்களின் கவனக்குறைவால் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள்.



இவர்களில், Giovannaவும் ஒருவர். அவரது மயக்க மருந்து நிபுணரின் தவறு, Giovanna வாழ்நாள் முழுவதும் முதுகுத்தண்டில் ஊசி ஒன்றுடன் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

விடயம்என்னவென்றால்,Giovannaவின் மருத்துவர் தவறுதலாக ஊசியை அவரது முதுகெலும்பில் விட்டுவிட்டாரா, அதாவது, அது அவருக்குத் தெரியுமா, தெரியாதா, அல்லது தவறு நடந்தும் அவர் அதை மறைத்துவிட்டாரா என்ற எந்த கேள்விக்கும் பதிலில்லை.

சொல்லப்போனால், அது தொடர்பாக புழையயியெ புகாரளித்தும் மருத்துவ அமைப்பு முறையான நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. தனது இரண்டு பிள்ளைகளும் பிறக்கும்போது, முதுகெலும்பில் ஊசிபோட்டபோது இந்த தவறு நடந்திருக்கலாம் என கருதுகிறார் Giovanna. ஆனால், அவரது குற்றச்சாட்டை நிரூபிக்க எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. என்றாலும், பதில் கிடைக்காமல் விடப்போவதில்லை என போராடிவரும் புழையயியெ, ஆறு ஆண்டுகளாக பதிலுக்காக காத்திருக்கிறார்.